**ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்**
**வினா விடை நேரம்**
**வினா எண் 308**

## தலைப்பு ஸ்வாமி யின் அன்புக்கு உரியவராக இருப்பது என்பது ஸ்வாமியின் அருகாமையில் இருப்பதை விட முக்கியமானதாகும்

**நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 107-114 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி**

கேள்வி: ஸ்வாமி சாயி தெய்வத்தின் உன்னத மாண்பானது உலகின் பல பாகங்களிலிருந்தும் நாங்கள் கேள்வி படாத பல தேசங்களிலிருந்தும் பல்வேறு மொழி பேசுகின்ற இன குழுக்களிலிருந்தும் உங்கள் அன்பினால் ஈர்கப்பட்ட மக்களை இங்கே புட்டபர்த்திக்கு கொண்டு வந்து சேர்ந்திருக்கின்றது.
நாங்கள் உங்களுக்கு மிக அருகாமையில் இருந்தும் எங்களைவிட அவர்களே உங்கள் அறிவுரைகளை வாழ்க்கையில் பின்பற்றுபவர்களாக இருக்கின்றார்கள்.
நாங்கள் எதனால் இப்படி இருக்கின்றோம் ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்:
தீவிர நம்பிக்கையும் தளர்வில்லாத இடைவிடா பக்தியுமே ஒரு பக்தனுக்கு உயர்ந்த தெய்வீக அனுபவங்களை பெற்று தருகிறது.
சொல்லப்போனால் என் அருகாமையில் இருப்பதனாலேயே என் தெய்வீகத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது.
தீபத்தின் கீழே நிழல் தெரிவதில்லைஅதை போலத்தான் இதுவும்.
என்னுடைய தெய்வீக ஒளி எல்லா இடங்களிலும் பரவி வியாபிக்கும் அதே நேரத்தில் என்னுடனேயே
அருகிலேயே இருப்பவர்களால் அந்த தெய்வீகத்தை உணர முடியாமல் போய்விடுகிறது.

குளத்தில் இருக்கும் தாமரையிலிருந்து தேனை பருகுவதற்கு வண்டுகள் வெகு தூரத்திலிருந்து வருகின்றன.

ஆனால் குளத்திலேயே வசிக்கின்ற தவளைக்கு தேனின் சுவை தெரிவதேயில்லை.
கடவுள் மனித உருவில் அவதரிக்கும் போதும் இப்படி தான்.
கடவுளின் கூடவே இருப்பவர்கள் தெய்வீகத்தின் மாண்பை புரிந்து கொள்வதில்லை

மாங்கனி என்று சொல்லும் போதே அதை உண்ண ஆசை படுகிறீர்கள்.
ஆனால் கடைக்கு சென்று வாங்கும் போது அது பழுத்திருக்கிறதா என்று சோதிக்க கையில் எடுத்து முகர்ந்து பார்கிறீர்கள் இல்லையா.
அதாவது விரும்பியது கைக்கு கிட்டினால் சந்தேகம் வருகிறது.

ஸ்வாமி உங்களுடைய கனவில் வந்தார் என்கிறீர்கள்.
அவருடைய தெய்வீக மகிமைகளை உங்களுடைய இருப்பிடத்திலேயே காணும் பேறு பெற்றதை பற்றி பேசுகின்றீர்கள்.
ஆனால் ஸ்வாமி யின் அருகாமையில் இருக்கும்போது ஸ்வாமியின் தெய்வீகத்தை மறந்து சாதாரண மனிதனிடம் நடப்பது போல் நடந்து கொள்கிறீர்கள்.
உலகத்தின் மற்ற தேசங்களில் உள்ள ஸாயி பக்தர்களுக்கு கிட்டிய மாபெரும் தெய்வீக அனுபவங்களை பற்றி அறியாது கிணற்று தவளையாக இருக்கிறீர்கள்.
நீங்கள் ஸ்வாமியின் அருகில் எவ்வளவு வருடங்கள் இருந்தீர்கள் என்பது முக்கியமல்ல.
பேருந்து ஓட்டுநர்கள் கூட இங்கு தினசரி வந்து போகிறார்கள்.அவர்களால் என்ன தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள முடிந்தது .
இரும்பை எவ்வளவு நாட்கள் தண்ணீரில் போட்டு வைத்தாலும் ஒரு மாற்றமும் நேர போவதில்லை.
ஒரு சிறு ஒளிக்கீற்றின் வெளிச்சத்தில் இருள் விலகுவது போல அஞ்ஞானம் என்ற இருளை ஞானத்தினால் மட்டுமே விலக்க முடியும்.

உங்களுக்கு ஸ்வாமியின் மீது நல்ல அன்பும் நம்பிக்கையும் இருக்குமானால் ஸ்வாமி யின் அறிவுறைகளை நீங்களாகவே கடைபிடிக்க ஆரம்பிபீர்கள்.
இது போல் நல்ல மனமாற்றம் அடைந்தவர்கள் இவ்வுலகில் எவ்வளவோ பேர் இருக்கின்றார்கள்.இது தெய்வத்தின் பால் அவர்கள் கொண்ட உண்மையான அன்பினாலேயே சாத்தியமாகிறது

நீங்கள் கூட உங்கள் நன்பர்களை மேல் அதிகாரிகளை பெரியவர்களை மதிக்கின்றீர்கள்.
ஆனால் கடவுளை மட்டுமே நீங்கள் வணங்கி போற்றுகின்றீர்கள்.

அடுத்த கேள்வி
ஸ்வாமி உலகில் உள்ள பல நாடுகளில் இருந்து அர்ஜென்டினா பிலிபைன்ஸ் ரஷ்யா என்று பலரும் இங்கு வந்து உங்கள் அன்பு வெள்ளத்தில் நனைந்து உங்களை பிரிய மனமில்லாமல் திரும்பி செல்கிறார்கள்.
அவர்களுக்கு என்று நீங்கள் கூறுகின்ற பிரத்யேகமான செய்தி என்ன ஸ்வாமி.

ஸ்வாமி யின் பதில் :
நீங்கள் கடவுளின் ஏகத்துவத்தை உணர்ந்து அனுபவிக்க வேண்டும்.
கடவுள் எப்போதும் உங்களுடன் உங்களுக்கு கீழே மேலே உங்களை சுற்றி பரந்து இருக்கின்றார்.
சொல்லப்போனால் நீங்கள் ஒவ்வொருவருமே கடவுள் தான்.
நீங்கள் ஆன்மீக ஆற்றலை அதிகரித்து கொள்ளவதற்காக புட்டபர்த்திக்கு வருகின்றீர்கள்.
இந்த சமயத்தில் ஒன்றை மறந்து விடாதீர்கள்.
ஸ்வாமியின் அருகாமையில் இருப்பதை விட ஸ்வாமியின் அன்புக்கு உரியவராக இருப்பதுதான் முக்கியமானது.
இரண்டு கற்களை உரசும் போது நெருப்பு உண்டாகிறது.அப்போது காற்று வீசினால் தான் நெருப்பு கொழுந்து விட்டு எரியும்.
அன்புக்குரியவராக இருப்பது என்பது அந்த காற்று வீசுவதை போல.
குளத்தில் இருக்கின்ற தாமரையின் தேன் சுவை அறியாத தவளைகள் என்பது தான் ஸ்வாமி க்கு அருகாமையில் இருப்பது.
வெகு தூரத்திலிருந்து வந்து தேனை உண்டு மகிழ்கின்ற தேனீக்கள் என்பதே ஸ்வாமி யின் அன்புக்கு உரியவராக இருப்பது என்பது.
கலங்கரை விளக்கத்தின் ஒளியோ தூரத்தில் உள்ள கப்பல்களுக்கும் வழிகாட்டுகிறது.
ஆனால் அதன் அடியில் கரிய நிழல் தான் படிகிறது.

அடுத்த கேள்வி

ஸ்வாமி நாங்கள் உங்களின் அருகாமையில் இருக்கும் போது மட்டும் நல்லவர்களாக அன்பு செலுத்துபவர்களாக பணிவு கொண்டவர்களாக வெறுப்பில்லாதவர்களாக ஒழுக்கத்துடன் நடந்து கொள்கிறோம்.
ஆனால் இங்கிருந்து கிளம்பி சென்றவுடன் நாங்கள் அடியோடு மாறிவிடுகிறோம்.கற்றுக்கொண்ட நல்ல குணங்களை கைவிட்டு கீழான நிலைக்கு மீண்டும் இறங்கி விடுகிறோம் ஸ்வாமி
தயவு கூர்ந்து இதற்கான காரணத்தை எங்களுக்கு தெளிவு படுத்தி எங்களை காக்க வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:

இல்லை இல்லை அது அப்படியில்லை.
நீங்கள் சொல்கின்ற நல்ல குணங்களும் ஒழுக்கமும் உண்மையானதாக இயல்பானதாக உங்களுக்கு அமையவில்லை
அவை செயற்கையான பிளாஸ்டிக் மலர் போல.அவைகளால் தேனீக்களை ஈர்க்க முடியாது.இவை வெறும் பகட்டுக்காக நீங்கள் வெளிபடுத்துகின்ற உணர்வே அன்றி கடவுள் இவற்றால் மகிழ்ச்சி அடைவதில்லை.
கடவுள் உங்கள் உள் மனதின் உண்மை பாவத்தை மட்டுமே பார்கின்றார்.
புட்டபர்த்தியில் இருந்து சென்றவுடன் உங்கள் நல்ல குணங்கள் கீழிறங்கி விடுவதாக வருந்துகிறீர்கள்.
உண்மை அதுவல்ல.உள்ளார்ந்த நல்ல குணங்கள் இயல்பாகவே உங்களுக்கு இருக்குமானால் அது எந்த இடத்திலும் எந்த காலத்திலும் மாறாது.
தவறு உங்களிடத்தில் தான்.
ஸ்வாமி மீது உறுதியான நம்பிக்கை உங்களுக்கு இல்லை.

இப்போது நீங்கள் கொடைகானலில் இருக்கிறீர்கள்
குளிருக்கு கம்பளி ஸ்வெடர் அணிந்துள்ளீர்கள்.அவை வெப்பத்தை உண்டாக்கி குளிரிலிருந்து காக்கின்றன.
அது போலவே இந்த உலகியலான லௌகீக வாழ்கை போட்டிகள் சோதனைகள் நிறைந்ததாக உள்ளது.
அதை எதிர்கொள்ள பக்தி ஒழுக்கம் அர்பணிப்புடன் கூடிய கடமை உணர்வு இவை எல்லாம் அவசியமாகும்.
நீங்கள் நல்ல எண்ணங்களும் நல்ல நடத்தையும் உடையவராக இருந்தால் வாழ்கையின் எந்த சூழ்நிலையையும் உங்களால் சமாளித்து விட முடியும்.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி நாங்கள் இங்கே உங்களுடன் இருக்கின்ற பாக்கியம் என்பது உங்களுடைய சங்கல்பத்தினாலும் அருளினாலும் மட்டும் தானே தவிர எங்களுடைய முயற்சியினால் அல்ல.

உங்களுடைய பெரும்பாலான நேரத்தை எங்களுக்காக செலவிடுவதாகவே நீங்கள் கூறுகிறீர்கள்.

அப்படி இருக்கையில் நாங்கள் உங்களுக்காகசெய்ய வேண்டியது என்ன ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்:

நீங்கள் என்காக செய்ய வேண்டியது எதுவும் இல்லை.உங்களிடம் எனக்கு எந்த தேவையும் இல்லை.

நான் எப்போதும் மற்றவர்களுக்கு தருபவனேயன்றி ஒரு போதும் மற்றவர்களிடமிருந்து எதையும் பெறுபவனல்ல. எதையும் பெறுவதற்காக நான் ஒரு போதும் மற்றவர்களிடம் கை ஏந்துபவனல்ல.நான் மற்றவர்களிடம் எதையும் வேண்டி கேட்பதே இல்லை.

என்னுடைய சங்கல்பபடி தான் சிருஷ்டி அனைத்தும் இயங்குகின்றன

அப்படி இருந்தும் நான் உங்களிடம் கேட்பது ஒன்றே ஒன்றுதான்.

உங்களுடைய அன்பை எனக்கு தாருங்கள்.

உங்கள் பெற்றோர்கள் கூட உங்களை விட்டு சற்று தள்ளி இருக்கிறார்கள்.ஆனால் நான் எப்போதும் உங்களுடனேயே உங்களை சுற்றி மேலே கீழே என்று எங்கும் என்றும் உங்களை சூழ்ந்து இருக்கின்றேன்.

நான் எப்போதும் உங்களுடயவன் உங்களுக்கு சொந்தமானவன்.இந்த ஒன்றை மட்டும் எப்போதும் ஞாபகம் வைத்து கொள்ளுங்கள்.அது போதும்.

நீங்கள் ஒரு ரத்தினம் போல் உங்கள் வாழ்க்கையில் ஜொலிப்பது நிச்சயம்.

நீங்கள் சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையும் பெற்று நல்ல பெயர் ஈட்டுவீர்கள்.

ஸ்வாமியையும் உங்களையும் இணைக்கின்ற ப்ரேம பந்தத்தை ஒரு போதும் மறந்து விடாதீர்கள்.

ஸ்வாமியின் அறிவுறைகளை நடைமுறை வாழ்கையில் கடைபிடித்து நல்ல பெயர் ஈட்டுங்கள்.

நன்றி

மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் அனில்குமார் சாயிராம் அவர்களின் சத்யோபனிஷத்திலிருந்து நல் முத்துக்களை பருகி மகழ்வோம்.
ஜெய் சாயிராம்